## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## MCOP. No.36/2022

**04.05.2026**

**திரு . முருகானந்தம், த/பெ. ராமதாஸ்**

PW : 1

2026 ஆம் ஆண்டு மே மாதம் 04 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய வயது மற்றும் Electrcian ஆக மாதம் ரூ.25,000/- சம்பாதித்தற்கான காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது நல்ல நிதானமாக இருந்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் உள்ளவிவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நான் விபத்து சமயத்தில் மது அருந்தியதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான் ஆனால் எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. நான் குடித்துவிட்டு தான் வாகனத்தை ஓட்டியுள்ளேன் என்றாலும், வழக்கிற்காக குடிக்கவில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கைக்கான விவரத்தை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். அதில் வாகனம் முட்டி விபத்து ஏற்பட்டதாக நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லவில்லை.

1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்டி மெதுவாக வாகனத்தை ஓட்டினார் என்றும் அந்த வாகனத்தில் கட்டப்பட்டுள்ள பேரார் தானாக நழுவி ரோட்டில் விழுந்தது. அதனை நான் பார்க்கமால் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தால் எனக்கு தலையில் பாதி தலைக்கவசம் மாட்டியதால் தான் தலைக்கவசம் பாதி அளவு நகர்ந்ததால் தாடையில் அடிப்பட்டு பற்கள் உடைந்து காயம் ஏற்பட்டது. இந்த விவரத்தை எனது முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் ஓட்டிச்சென்ற வாகனத்தையும், வாகன உரிமையாளரையும் அதன் காப்பீட்டு நிறுவனத்தையும் இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல ஓட்டுநர் உரிமம் உள்ளது அது காணாமல் போய்விட்டது. இந்த விவரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த விபத்திற்கு நான் தான் முழு காரணம் என்றாலும், அதனால் ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்றாலும், அரசு மருத்துவமனையில் அளித்த சிகிச்சையால் குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. விபத்திற்கு பிறகு இழப்பீடு கோரி இம்மனு உரிய காலத்திற்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலவாதி தோஷத்தால் இம்மனு காலவாதிவிட்டது என்றால் சரியல்ல.

நான் எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் இழப்பீடு அதிகம் பெறுவதற்காக காயத்தின் தன்மையை அதிகமாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுப்படிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 19:09:17 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்